## பொதுத்தகவல்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி உள்ளது. இப்பேரூராட்சியில் மக்கள் தொகை 13683, மொத்த வார்டுகள் 15. தொட்டியத்தில் அருள்மிகு மதுரை காளியம்மன் திருக்கோயில் உள்ளது. தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சி ஒரு வளர்ந்து வரும் நகரம் ஆகும். இப்பேரூராட்சி எல்லைப்பகுதி 31.95 ச.கி.மீ பரப்பும், 6 குக்கிராமங்கள் அடங்கிய பகுதியுமாகும். இப்பேரூராட்சி பகுதியில் சுமார் 4326 குடியிருப்பு வீடுகள் உள்ளது. இப்பேரூராட்சி பகுதியில் அதிகமானவை விவசாய பகுதிகளாகவும், மற்றவை குடியிருப்பு பகுதிகளாகவும் உள்ளன. இப்பேரூராட்சியில் பொது சுகாதார பணிக்கு ஒரு டிராக்டர், மற்றும் மூன்று சக்கர தள்ளுவண்டி 20ம், பவர் டில்லர் வண்டி 1ம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளர் இரண்டு பேரும், துப்புரவு பணியாளர்கள் 19 நபர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இப்பேரூராட்சியில் வாரச்சந்தை ஒன்றும், தினசரி சந்தை ஒன்றும் பராமரிக்கப்படுகிறது. மேலும் பேரூராட்சி மூலம் பேருந்து நிலையம் C. வகை ஒன்று பாரமரிக்கப்பட்டு வருகிறது. இதில் தினசரி சுமார் 110 பேருந்துகள் வந்து செல்கின்றன.

பேரூராட்சியின் வடக்கு பகுதியில் தொட்டியம் அரங்கூர் சாலையில் பேரூராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு சர்வே எண்: 26/1-ல் அமைந்துள்ளது. இதன் பரப்பு சுமார் 1.00 ஏக்கர் ஆகும், இந்த இடத்தை சுற்றி முள் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. உரக்கிடங்கில் வைப்பறை ஒன்றும், மக்கும் குப்பைகளுக்கான உரத்தொட்டி 20-ம் மற்றும் மண்புழு தொட்டி 6-ம் கட்டப்பட்டு உள்ளது. உரக்கிடங்கு பணிக்கு தண்ணீர் வசதிக்காக கைபம்பு ஒன்றும், சின்டெக்ஸ் தொட்டியும் அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு உரக்கிடங்கை சுற்றி பசுமை பகுதியாக பேணப்பட்டு மரக்கன்றுகள் நட்டு, பூங்கா போன்று பராமரிக்கப்பட்டு வருகிறது.






### வீடு தோறும் குப்பைகள் சேகரித்தல்

வீடு வீடாக குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு "காவேரி மகளிர் சுய உதவி குழுவினால்" வார்டுகளுக்கு ஒரு மண்டலம் என்ற அடிப்படையில் 10 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு காலை 7.00 மணி முதல் 10.00 மணிக்குள் இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தெருக்களில் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பையை பெறுகிறார்கள். இவர்கள் தினசரி ஒரே பாதையை கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் இயக்கும் தள்ளு வண்டியில் மணி பொருத்தப்பட்டுள்ளது. மணி ஒலிப்பதன் மூலம் வீட்டில் உள்ளவர்கள் தங்களது வீட்டில் உள்ள குப்பைகளை தள்ளுவண்டியில் உள்ள பச்சை மற்றும் சிவப்பு நிற கொள்கலன்களில் சேர்க்கிறார்கள். வீடுகளிலேயே குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து பச்சை நிறக்கூடையில் மக்கும் குப்பைகளும், சிவப்பு நிறக்கூடையில் மக்காத குப்பைகளும் போட்டு வாங்கப்படுகிறது. 2500 வீடுகளுக்கு பச்சை நிற கூடை ஒன்றும், சிவப்பு நிற கூடை ஒன்றும், கிராமாலயா-வாட்டர்எய்டு திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. மூன்று சக்கர வண்டி 20-ம், பவர் டில்லர் வண்டி 1மூலம் சுமார் 1டன் அளவு மக்கும் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. மேலும் தினசரி 2 கிலோ அளவில் மக்காத காகிதங்களான பிளாஸ்டிக் பைகள் சேகரிக்கப்படுகிறது. மேலும் தினசரி 5 கிலோ மக்காத குப்பைகள் தனியே மூட்டைகளில் கட்டி சேகரிக்கப்படுகிறது.

### குப்பைகளை தரம் பிரித்தல்

வீடுகளில் இருந்து பெறப்படும் குப்பைகள் சரியாக தரம் பிரிக்கப்பட்டு உள்ளதா என்று பேரூராட்சி பணியாளர்கள் ஒருமுறை சரி பார்த்து கொள்வர். தவறுதலாக கூடையை மாற்றி குப்பைகளை கொட்டியிருந்தால், அதனை பணியாளர் சரி செய்வர். இவ்வாறு வீடுதோறும் குப்பைகள் தரம்பிரித்து சேகரிக்கப்படுகிறது. மேலும் தினசரி 2 கிலோ மக்காத குப்பைகள் தனியே மூட்டைகளில் கட்டி சேகரிக்கப்படுகிறது. குப்பைகளை தரம் பிரிக்கும் பொழுது பணியாளர்கள் கைகளில் கையுறைகள் மாட்டிக்கொண்டு தரம் பிரிப்பர்.



### சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லுதல்.

வீடுகளில் இருந்து காவேரி மகளிர் சுய உதவி குழுவினால் பெறப்பட்ட குப்பைகள் தரம் பிரித்து சேகரித்து அரங்கூர் சாலையில் அமைந்துள்ள குப்பை சேகரிப்பு மையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. பின் பேரூராட்சி பவர் டில்லர் வண்டி மூலம் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. பவர் டில்லர் வண்டியில் உள்ள குப்பைகள் காற்றில் பறந்து அசுத்தம் ஆகாத நிலையில் வாகனம் வலை கொண்டு மூடப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேலும், பொது சாலைகள் தெருக்களில் கூட்டி சுத்தம் செய்வதால் ஏற்படும் குப்பைகள் தனியே உரக்கிடங்கிற்கு கொண்டு வரப்படுகிறது.



### மக்காத குப்பைகளை மறு சுழற்சி செய்தல்

இப்பேரூராட்சி பகுதியில் தரம் பிரித்து வாங்கப்படும் மக்காத குப்பைகளில் பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து நாணல் சுய உதவி குழுவினருக்கு 1 கிலோ ரூ 3/- வீதம் விற்பனை செய்யப்படுகிறது. நாணல் சுய உதவி குழுவினர் SJSRY திட்டத்தில் கடனுதவி பெற்று சிறு தொழில் கூடத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்து மின்சார வயரிங் உதிரி சாமான்கள் தயாரிக்கின்றனர். மக்காத குப்பைகளிலிருந்து பிரித்து எடுக்கப்படும் கண்ணாடிபாட்டில்கள்,

தோல்பொருட்கள்; இரும்புசாமான்கள் போன்றவை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.



## உரக்கிடங்கில் உரமாக்கல் பணி

பேரூராட்சி பகுதியில் உள்ள சுமார் 4326 வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளில் சுமார் 1டன் குப்பைகள் மக்கும் கழிவுகளாகஉள்ளது.உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படும் இந்த மக்கும் கழிவுகள் மற்றும் தெரு கூட்டுவதால் சேகரிக்கப்பட்ட குப்பைகள் மீண்டும் ஒருமுறை தனியே பிரித்து எடுத்து சேகரிக்கப்படுகிறது. தரம் பிரித்த மக்கும் குப்பைகள் தனியே குவிக்கப்பட்டு, விண்ட்ரோ உரமாக்கல் முறையில், காலி இடத்தில் சுமார் 10 அடிநீளம், 6 அடி அகலம், 4 அடி உயரம் உள்ள குவியலாக்கி வைக்கப்படுகிறது. இந்த கழிவுகள் மக்கி உரமாக மாறுவதற்கு ஏதுவாக தண்ணீர் தெளித்து உரிய ஈரப்பதம் இருக்குமாறு பார்த்து கொள்ளப்படுகிறது. மேலும், மக்கும் குப்பைகள் உரிய கால இடைவெளியில் கிளறியும், புரட்டியும் விடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. மேலும் விரைவில் மக்கும் பணி நடைபெற சாணக்கரைசலும், EM கரைசலும் அவ்வப்போது தெளித்து உரமாக்கப்படுகிறது.

## மண்புழு உரம் தயார் செய்தல்

இப்பேரூராட்சி உரக்கிடங்கில் 13.06.08-ல் மண்புழு உரம் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டது. மக்கிய குப்பைகளை 6 தொட்டியில் போட்டு மண்புழுவினை அந்த தொட்டியில் விட்டு, தினமும் ஈரபதமிட்டு மக்கும் குப்பைகளை மண்புழு சாப்பிட்டு, மண்புழுவால் வெளியேற்றப்படும் கழிவுகளால் மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. தற்பொழுது மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு 225 கிலோ, ஒரு கிலோ ரூ.4/- வீதம் ரூ.900/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. விரைவில் அதிக அளவு மண்புழு உரம் தயாரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## உர விற்பனை

பேரூராட்சி பகுதியிலிருந்து சேகரித்து மக்க வைத்த குப்பைகள் இயற்கை உரமாக மாறிய பின் உலரவைத்து சலித்து தொட்டிகளில் தனியே சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு தயாரித்து சலித்த இயற்கை உரம் தற்போது 5,600 கிலோ சேகரித்து கிலோ ரூ.1/-வீதம் ரூ.5,600க்கு விற்பனை செய்யப்பட்டு பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டு உள்ளது, இந்த இயற்கை உரத்தின் நன்மைகள் மற்றும் பயன்கள் குறித்து அருகில் உள்ள கிராம விவசாயிகளிடம் நேரடியாக எடுத்து சொல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



மேலும் தகவல்களுக்கும், இயற்கை உரம், மண்புழு உரம் வாங்குவதற்கும் தொடர்பு கொள்ளவும்

**தொட்டியம் பேரூராட்சி அலுவலகம்,தொட்டியம்**

**குடிநீர் சுகாதார நலச்சங்க கூட்டமைப்பு,தொட்டியம்**

**உரக்கிடங்கு, தொட்டியம்-அரங்கூர் ரோடு.**

**Gramalaya**
12, 4th Cross, Thillainagar, Trichy - 620 018. Ph : 91 431 4021563
E.mail : gramalaya@hotmail.com Web : www.gramalaya.in

Published by Gramalaya in Association with WaterAid
and Thottiam Town Panchayat. 2008 -2009

Gramalaya






# தொட்டியம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

WaterAid